**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 136/2006** **Date:15.04.2026.**

**(PW1)-** அருட்செல்வன்

**1,2** மற்றும் **4** ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் நான் தற்போது தெலுங்கானாவில் வேலை பார்ப்பதால் அங்கு உள்ளேன் எனது வீடு மற்றும் குடும்பத்தினர் வாவறையில் குடியிருந்து வருகின்றனர். நான் தெலுங்கானாவில் எவ்வளவு வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன் என்றால் வாரங்கள் மாவட்டம் கடவெண்டியில் உள்ள புனித ஜான் டி பிர்டோ பள்ளியில் சுமார் 18 வருடமாக ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குளச்சல் கதவு எண் 27/1 ஏ-வில் குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி கதவு எண் கொண்ட வீட்டிற்கு எனது பெயரில் ஆணையர் பெயர் மாற்றம் செய்த உத்தரவை தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் எனது பெயருக்கு தாவா வீடுகள் அனுபவத்தில் இருப்பதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா வீட்டில் ஒரு காலமும் இருந்தது கிடையாது என்றாலும் எனவே தான் எனது பெயரில் எந்த ரசீதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கதவு எண் 27/1 ஏ, 27/1 பி, 27/1 சி ஆகிய கதவு எண்கள் கொண்ட மூன்று வீட்டிலும் குடியிருந்து வருவதாக எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, மேற்படி முன்று வீடுகளும் எனது கைவச அனுபவத்தில் உள்ளது ஆனால் நான் கதவு எண் 27/1 ஏ கொண்ட வீட்டில் மட்டும் குடியிருந்து வருகிறேன். கதவு எண் 27/1 ஏ உள்ள வீடு யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தையின் பெயரில் உள்ளது.

3. நான் மேற்படி கதவு எண் 27/1 ஏ,27/1 பி, 27/1 சி வீடுகள் எனது பெயரில் இல்லை என்ற விபரத்தையும் எனது அப்பாவின் பெயரில் தான் உள்ளது என்ற விபரத்தையும் எனது நிரூபண வாக்குமூலத்தில் ஏன் குறிப்பிடவில்லை என்றால் அதை நான் ஒரு காரணமாக எடுக்கவில்லை. எனது முதல் விசாரணையில் மேற்படி கதவு எண் கொண்ட வீடுகள் எனது பெயரில் உள்ள விபரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி கதவு எண் கொண்ட மூன்று வீடுகளும் ஒருபோதும் எனது கைவச அனுபவத்தில் இருந்தது இல்லை எனவே தான் நான் தாவா வீடுகள் எனது அனுபவத்தில் உள்ளது என்று குறிப்பிடவில்லை

என்றால் சரியல்ல. மேற்படி கதவு கொண்ட வீடுகளில் நான் குடியிருந்ததை காட்டகூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். நான் எனது சகோதரர் மற்றும் அப்பாவுடன் சண்டையிட்டு எனது மனைவியுடன் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**